[2013 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்டதொரு கேள்வியை இங்கே எழுப்பினார்கள். இதில் தனியார், அரசு என்கிற பாகுபாடுகளையெல்லாம் அரசு பார்ப்பது கிடையாது. வெளிநாட்டிலேயிருந்து பெரிய தொழில் பொருட்களெல்லாம் இங்கே வருகின்றன என்று குறிப்பிட்டார்கள். அதில் எதையெதை எதிர்க்க வேண்டுமோ அதையெல்லாம் அம்மா அவர்களுடைய அரசு தக்க நேரத்திலே எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். மக்காச் சோளம், கிராமப் பகுதியிலே மிக அதிகமாக இருக்கிறது. அதனை எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற திட்டத்தை, துறை அலுவலர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தத் திட்டம் குறித்து சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

108—

சொந்தக் கட்டடம்

***8828—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்பது மைய அரசின் திட்டம் என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயன்போடு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்து, எங்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்டித் தர முடியுமோ அதனை உடனே மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில், தேவகோட்டை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டவுடன், கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு பிறப்பை அறிந்தவன் இறைவன்; குழந்தை வடிவாய் அருள்பவன் முருகன். சிறார்களைச் சீராட்டி வளர்ப்பது தாய்மை; சிந்தனையாளர்கள் பாராட்டிப் புகழ்வது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வாய்மை. (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைத் தீனியைக் கொள்ளையடித்தது தீய சக்தியின் திறமை; குழந்தையின் வாட்டத்தைப் போக்கி, ஊட்டத்தை அளித்தது மகா சக்தி அம்மாவின் மகிமை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இடமும் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, அங்கே புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே 164 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. இதிலே 91 மையங்கள் மட்டும்தான் அரசு சொந்தக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்திலே 58 மையங்களும், இலவசக் கட்டடங்களிலே 15 மையங்களும், ஆக 73 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன.

அவற்றையும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் நிதியிலிருந்து எங்கெங்கே அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லையோ அந்தக் கட்டடங்களையெல்லாம் கட்டிக் கொள்ளலாம் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைத் தந்து, உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைத் தங்களின் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான கட்டடங்கள் 73. தாங்கள் கொடுக்கின்ற நிதியை முழுமையாகக் கொடுத்தால்கூட அதைக் கட்டி முடிக்க முடியாது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசீலனை செய்து, எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய 73 அங்கன்வாடி மையங்களுக்கு முடிந்த அளவிற்குக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக, தொகுதி மக்களின் கோரிக்கையாக வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை அதிகாரத்தின்படி-- மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களுக்கு அவசியமாக உடனடியாக அங்கன்வாடி மையங்கள் தேவைப்படுகின்றன என்று விரும்புகிறாரோ அவற்றிற்கான*

கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

உரக் கலவை ஆலை

***6385—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாமணி உரக்கலவை ஆலையை நவீனப்படுத்தி வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பாமணி உர ஆலையின் தற்போதைய கட்டுமான அமைப்பு, ஆலையை நவீனமயமாக்குவதற்கு ஏற்றவகையில் இல்லை. மேலும், புதிய கட்டடங்கள் கட்டி ஆலையை நவீனமயமாக்க போதுமான நிதி வசதியும் இல்லை. இருப்பினும், எடையிடுதல், சிப்பமிடுதல் மற்றும் நகர்வு செய்தல் ஆகிய பணிகள் ரூ.32 இலட்சம் செலவில் இயந்திரமயமாக்கப்பட்டு 24–7–2012 முதல் செயல்பட்டு வருகிறது. இதனால் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 40 மெட்ரிக் டன் அதிகரிக்கும் நிலையில் 18 பணியாளர்கள் நேரடியாகவும், 20 பணியாளர்கள் மறைமுகமாகவும், ஆக மொத்தம் 38 பணியாளர்கள் கூடுதலாக வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*